**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 115 of 2023

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : வில்பர்ட்
Father's Name : த/பெ. வின்சென்ட்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th **day of January** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிரி வேறு வழக்கில் சிறையில் உள்ளார். 2ம் எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

முதல்விசாரணை

1. நான் தற்போது ரோஜாநகரில் வசித்து ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பார்வைமகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுயைடதாகும்.

2 கடந்த 02.10.2023ம் தேதியன்று காலை 10.30 மணியளவில் ஜெர்மன் கார்டன் அருகே செயின் பறித்த இடத்தின் அருகே வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கிருந்த வீடுகளை எழுதி கொண்டு படம் வரைந்தார்கள் அதற்கு சாட்சியாக நானும் சித்ரா என்பரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **(பார்வைமகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. புகார்தாரர் ஜெயக்குமாரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவரிடம் தான் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். புகார்தாரருடைய வீடு எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அங்குள்ள இடம் எனக்கு பரீட்சயம் என்றால் சரிதான். என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த சித்ரா புகார்தாரர் வீட்டில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். போலீசார் வந்திருப்பதாகவும் சாட்சி கையொப்பம் போடுமாறு என்னுடைய உரிமையாளரான புகார்தாரர் கூறினார் என்றால் சரியல்ல. நான் வேறு வேலையாக சென்றிந்தேன். அப்போது போலீசார் அங்கு வந்திருந்தார்கள்.

2. காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார். உரிமையாளர் கூறியதால் நான் சம்பவ இடத்திற்கு சென்று கையொப்பம் செய்தேன் என்றர்ல் சரியல்ல. சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றாலும் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2024.01.24 18:12:14 -1000

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**